தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
வேளாண் வானிலை ஆலோசனை மையம், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்
மற்றும்
மண்டல வானிலை மையம், இந்திய வானிலைத் துறை, சென்னை.

எண். 30/2025

15.04.2025

# வானிலை ஆலோசனை அறிக்கை – சேலம் மாவட்டம்

**சேலம் மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

பகல் மற்றும் இரவு நேர வெப்ப அளவுகள் முறையே 38.0° செ. (100.4° பா) மற்றும் 23.0° செ. (73.4° பா) யாக நிலவியது. சேலம் மாவட்டத்தில் சில இடங்களில் லேசான மழை பதிவாகியுள்ளது.

**சேலம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை (12.04.2025 – 14.04.2025) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (16.04.2025 – 20.04.2025) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள் –1 12/04 | நாள் –2 13/04 | நாள் –3 14/04 | தேதி | நாள் – 1 16/04 | நாள் – 2 17/04 | நாள் – 3 18/04 | நாள் – 4 19/04 | நாள் – 5 20/04 |
| 5.7 | 0.2 | 1.7 | மழை (மி.மீ) | 3 | 4 | 5 | 4 | 5 |
| 37.0 | 38.0 | 36.0 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 37.0 | 37.0 | 37.0 | 38.0 | 38.0 |
| 23.0 | 24.0 | 23.0 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 21.0 | 21.0 | 21.0 | 22.0 | 22.0 |
| லேசான மேகமூட்டம் | மேகமூட்டம் | சிதறிய மேகங்கள் | மேகமூட்டம் (ஆக்டா) | லேசான மேகமூட்டம் | லேசான மேகமூட்டம் | லேசான மேகமூட்டம் | லேசான மேகமூட்டம் | லேசான மேகமூட்டம் |
| 38-75 | 42-61 | 47-74 | காற்றின் ஈரப்பதம் (%) | 40-75 | 40-75 | 40-75 | 45-78 | 45-78 |
| 2 | 0 | 5 | காற்றின் வேகம் (கி.மீ / மணி) | 4 | 2 | 2 | 2 | 2 |
| வடக்கு | - | கிழக்கு | காற்றின் திசை | தெற்கு | மேற்கு | தென் மேற்கு | மேற்கு | மேற்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (16.04.2025 முதல் 20.04.2025 வரை)**

அடுத்த ஐந்து நாட்களுக்கான சேலம் மாவட்ட வானிலையில், வானம் பெரும்பாலும் லேசான மேகமூட்டத்துடன் காணப்பட்டு மாவட்டத்தின் சில இடங்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் வெப்பம் 38.0° செ. (100.4° பா) – க்கு மிகாமலும், இரவு வெப்பம் 21.0° செ. (69.8° பா) யாகவும் காணப்படும். காற்றின் திசை பெரும்பாலும் மேற்கிலிருந்தும் வீச அதன் வேகம் மணிக்கு 2–4 கி. மீ என்றளவில் வீசும். காற்றின் ஈரப்பதம் 40% – 78% மாக நிலவும்.

**கால்நடைகள், கோழிகள் மற்றும் வேளாண் வானிலை ஆலோசனை, (கா.உ.மே.து, நாமக்கல்)**

| **கால்நடைகள, கோழிகள மற்றும் பயிர்கள்** | **நிலை** | **வானிலை ஆலோசனை** |
|---|---|---|
| கோழிகள் | பொதுவான | நிலவும் வானிலையில் கோழிகளுக்கு **வெள்ளைக் கழிச்சல் நோய்** ஏற்பட வாய்ப்புள்ளது. இந்நோயின் அறிகுறிகள் கோழிகள் தலையை ஒரு பக்கமாக சாய்ந்து கொள்ளுதல், கழிச்சல் மற்றும் முட்டைகளின் எண்ணிக்கை குறைந்து இறப்பு ஏற்படும். பொதுவாக நாட்டு கோழி வளர்ப்பு விவசாயிகள் வெள்ளை கழிச்சல் நோய்க்கு எதிராக கோழிகளுக்கு தடுப்பூசி அளிக்க வேண்டும். அதாவது 7வது நாள் F1 தடுப்பூசி (கண்ணில் சொட்டு மருந்தாக) 28வது நாள் லசோட்டா (கண்ணில் சொட்டு மருந்தாக) 56வது நாள் ஆர்டிவிகே தடுப்பூசி (இறக்கையில்) போடவேண்டும். மேலும் வெள்ளைக்கழிச்சல் நோய் நாட்டுக் கோழிகளுக்கு வராமல் தடுக்க தடுப்பூசியுடன் கோழிகளுக்கு கீழ்கண்ட மூலிகை மருத்துவ முறைகளையும் பயன்படுத்தலாம்.<br>**10 கோழிகளுக்கு தேவையான மூலிகை மருத்துவம்**<br>➢ சீரகம் – 10 கிராம்<br>➢ மிளகு – 5 கிராம்<br>➢ மஞ்சள் பொடி – 5 கிராம்<br>➢ சின்ன வெங்காயம் – 5 எண்ணிக்கை<br>➢ பூண்டு – 5 பல்<br>➢ கீழாநெல்லி – 50 கிராம்<br>**சிகிச்சை முறை**<br>• மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து மூலிகை மருந்துகளையும் இடித்து அரைத்து அதை சிறு சிறு உருண்டைகளாக மாற்ற வேண்டும்.<br>• இக்கலவையை தீவனம் அல்லது அரிசி குருணையில் கலந்து கொடுக்கலாம். மிகவும் பாதிக்கப்பட்ட கோழிகளுக்கு சிறு சிறு உருண்டைகளாக வாய்வழியாக உட்செலுத்த வேண்டும். |
| கால்நடைகள் | பொதுவான | கோடை காலத்தில் பாலில் கொழுப்பு (Fat) மற்றும் கொழுப்பற்ற திட பொருட்களின் (SNF) அளவை நிலை நிறுத்த தீவனத்தில் சோடா உப்பு (50 – 100 கிராம் / நாள் ) கோடை காலம் முடியும் வரை கொடுக்க வேண்டும். மேலும் ஒவ்வொரு கறவை மாட்டிற்கும் நாளொன்றிற்கு 70 லிட்டருக்கு மேல் குடி தண்ணீர் தர வேண்டும். |
| **வேளாண் அறிவியல் நிலையம், நாமக்கல்** | | |
| தர்பூசணி | வளர் பருவம் | தற்போது நிலவி வரும் தட்பவெப்ப சூழ்நிலை காரணமாக தர்பூசணி சாகுபடி செய்துள்ள பகுதியில் **இலைப்பேண்** தாக்குதலினால் சேதம் தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த **ஊதா வர்ண ஒட்டும் பொறி** ஒரு ஏக்கருக்கு 5 வீதமும், இலை வழி தெளிப்பானாக **வேப்ப எண்ணெய்** ஒரு லிட்டருக்கு 3 மில்லி வீதம் கலந்து தெளிக்க வேண்டும். இதை தொடர்ந்து பொருளாதார சேத நிலை தாண்டும் போது **தையோமித்தாக்சம்** என்ற பூச்சிக்கொல்லியை ஒரு லிட்டருக்கு 2 கிராம் வீதம் கலந்து ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் தெளிக்க வேண்டும். |
| தென்னை | வளர் பருவம் | தென்னையில் **ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ தாக்குதல்** தென்படுகிறது. இதனை கட்டுப்படுத்த வேப்ப எண்ணெய் 5 மில்லியுடன் ஒட்டும் திரவம் 1.5 மில்லி / லிட்டர் தண்ணீரில் கலந்து பவர் கண் இயந்திரத்தின் மூலம் தெளிக்கவும் மற்றும் 3 அடி X 1.5 அடி **மஞ்சள் அட்டை** – 10 எண் / ஏக்கருக்கு பரவலாக கட்ட வேண்டும். கரும்பூஞ்சனத்தை மைதா மாவு கரைசலை தெளித்தும் **கிரைசோபிட் இரை விழுங்கிகள்** – 400 எண்ணிக்கைகள் மற்றும் **என்கார்சியா ஒட்டுண்ணிகள்** – 100 எண்ணிக்கைகள் வீதம் ஒரு ஏக்கருக்கு விட்டும் கட்டுப்படுத்தலாம். ரசாயன மருந்து தெளிப்பதை தவிர்க்க வேண்டும். |


தொழில்நுட்ப அலுவலார்
வானிலை ஆலோசனை மையம்
கால்நடை உற்பத்தி மேலாண்மைத்துறை
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
நாமக்கல்

பேராசிரியர் மற்றும் தலைவர் & ஒருங்கிணைப்பாளர்
வானிலை ஆலோசனை மையம்
கால்நடை உற்பத்தி மேலாண்மைத்துறை
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
நாமக்கல்